முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.163/2022

தேதி : 21–08–2025

(வா.சா.2) – திரு.வஞ்சிமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் வண்ணாப்பட்டி, பழனியில் வசிக்கிறேன். யார் யார்மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மாரிமுத்து மீது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக. எப்போது எங்கு வைத்து வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்றால் வாதியின் தோட்டத்தில் வைத்து 10.04.2021ல் கொடுத்தார். புரோநோட்டை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், பிரதிவாதி தான் கொண்டு வந்தார். பிரதிவாதி எப்போது புரோநோட்டை கொண்டு வந்தார் என்றால் 10.04.2021, காலை சுமார் 11 மணியளவில் கொண்டு வந்தார். புரோநோட் எழுதிய சமயத்தில் யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் வாதி, பிரதிவாதி, நான் மற்றும் செல்ல முத்து என்பவர். வேறு யாரும் அங்கில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட் எழுதிய விபரம் மேற்படி 4 பேருக்கும் தான் தெரியுமா என்றால் ஆமாம். வாதி எங்கு வசிப்பதாக புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் வடபருத்தியூர். பிரதிவாதி எங்கு வசிப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் மேல்கரைபட்டி. தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால ரூ.3 லட்சம். புரோநோட் எழுதும்போது வேறு பத்திரங்கள் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் தோட்டம் வைத்துள்ளார்.

2. வேறு தொழில் செய்கிறாரா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. வாதி பைனான்ஸ் தொழில் செய்கிறாரா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு உறவா என்றால் இல்லை, புரோநோட்டில் கையெழுத்து போட்ட மற்றொரு சாட்சியான செல்லமுத்து என்பவரை தெரியும், அவர்தான் என்னை அழைத்து சென்றார். செல்லமுத்துவிற்கும் எனக்கும் எத்தனை ஆண்டாக பழக்கம் என்றால் சிறுவயது முதல். செல்லமுத்துவிற்கும் வாதிக்கும் என்ன உறவு என்றால் வாதியின்

தங்கையை செல்லமுத்து திருமணம் செய்துள்ளார். நாங்கள் எதற்கு அங்கு சென்றோம் என்றால் செல்லமுத்து மச்சாணை பார்க்கலாம் என்று அழைத்து சென்றார், நானும் சென்றேன். புரோநோட் எழுதி வைத்திருந்தார்களா என்றால் இல்லை, நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பிரதிவாதி வந்தார். புரோநோட்டை யார் எழுதியது என்றால் செல்லமுத்து.

3. வாதி என்னுடன் வந்துள்ளாரா என்றால் ஆமாம். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வாதி சொன்னார் என்றால் சரிதான். இன்றைக்கும் சாட்சி சொல்ல வாதி தான் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். செல்லமுத்து உடன்வந்துள்ளாரா என்றால் இல்லை. வாதி முகில் ஆட்டோ பைனான்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. மேற்படி பைனான்ஸ்ஸில் பிரதிவாதி கடன் வாங்கிகொண்டு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அந்த தொகை திருப்பி செலுத்தி ஆவணங்களை பெற்றுக்கொண்டார் என்றால் அதை பற்றி தெரியாது. அப்படி கடன் வாங்கும்போது பிரதிவாதியிடம் வாதி வெற்றுத்தாளில் பிரதிவாதியின் கையெழுத்தை பெற்றுக்கொண்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வெற்றுத்தாளில் பெறப்பட்ட கையெழுத்தை வைத்து வாதி பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. புரோநோட்டில் முதலில் யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் பிரதிவாதி. எதில் கையெழுத்து போட்டார் என்றால் ஸ்டாம்பில். எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் ஒரு கையெழுத்து போட்டார். ஸ்டாம்ப்பில் போடப்பட்ட கையெழுத்தும், அதற்கு கீழே உள்ள கையெழுத்து ஒரே மாதிரியாக இல்லை என்றால் சரியல்ல. ஸ்டாம்ப்பில் போடப்பட்ட கையெழுத்தின் மையும், கீழே உள்ள கையெழுத்தின் மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் இல்லை, ஒரே பேனாவில் தான் போட்டார்.

4. வாதி மற்றும் செல்லமுத்துவிற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 10.04.2021ம் தேதியன்று பிரதிவாதி வாதியிடம் பணம் பெறவுமில்லை, புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், அதில் நான் சாட்சியாகவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி நடத்தி வருகின்ற பைனான்ஸ்ஸில் வெற்றுப்புரோநோட்டினை வாதி தான் நிரப்பினார் என்றும் அதில் தான் நான்

கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. புரோநோட் பெற்றதாக சொல்லப்படும் தேதிக்கு பின்னர் அந்த புரோநோட்டை நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. வாதி சொன்னதன்பேரில் புரோநோட் விபரங்களை சாட்சியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, ஞாபகத்தில் வைத்து தான் சொல்கிறேன்.

ஒம்.K.ரேணுகாதேவி
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.